முருகப்பெருமான் துணை

**மகான் ஜெகநாதர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.07.2023, புதன்கிழமை

1. தவசியே ஆறுமுக ஞானியே
   தருமம் வளர்க்கும் நோக்கில்
   அவதாரம் எடுத்த அரங்கனே
   அய்யனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது மிதுன திங்கள்
   குறைவிலா இருபான் திகதி புந்திவாரம்
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 20 ம் நாள், 05.07.2023, புதன்கிழமை)
   அறிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆற்றல்பட ஜெகநாதர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மைபட ஞான சமூகம்
   வானவர்கள் போற்ற அமைய
   வையகத்தார் அரங்கமகானின்
4. மகானின் அவதார மகிமை
   மண்ணுலகில் அறிந்து வந்து
   வகைபட சேவித்து நன்கு
   வணங்கி அரங்கன் கொள்கைகளை
5. கொள்கைகளை வழிமொழிந்து ஏற்று
   கொண்டுசெல்ல வேண்டும் இனிதே
   ஆளுமைகளும் ஏற்கும் வண்ணம்
   அகிலமெல்லாம் ஆற்றலாக நிரப்ப
6. நிரப்பவே இந்தக் கலியினில்
   நீதி நெறி தருமம் நிறைந்த
   அறத்துடன் கூடி நடத்தை கொண்ட
   ஆளுமையாகச் சிறந்து நன்கு

7. சிறந்துமே ஞானத் தலைமை
செப்பிட ஞான ஆட்சியுமாக
பரந்த பேருலகமே அடைந்து
பாடிடுவேன் சிறப்பு காண்கும்
8. காண்கவே அரங்கன் தேடும்
கண்டுரைப்பேன் தொண்டர்படை
ஆன்மீக ஞான அரசியல்களம்
அமைத்து அற்புதம் நிகழ்த்தும்
9. நிகழ்த்தவே உலகம் எல்லாம்
நிலமதனில் கிளைச்சங்கங்கள்
செகமெல்லாம் பெருகி வர
சேவைகளை மிகுதி செய்து
10. செய்துமே தருமம் வளர்த்திட
செயல்பாடு ஜீவத் தயவாக
மெய்ஞான வழிச் சென்றிட
மேலவர்கள் ஆசி கிட்டி
11. கிட்டியே உலகம் தன்னை
குறைவிலா ஞானஉலகாக
இட்டம்போல் மாற்றிக் காப்பர்
இயம்பிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—